Salve Regina

SOCIETY OF ST. PIUS X

ஆகஸ்ட் 2008

மலர்: 3 இதழ்: 8

(தனிச்சுற்றுக்கு மட்டும்)



சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

## ஜென்மப் பாவ தோஷம்

இந்த ஆசிரியர் பக்கத்தை எழுத சிந்தித்துக் கொண்டிருந்தபோது, இங்கே பாளையங்கோட்டையில் மக்களை அச்சமடையச் செய்யும் ஒரு பரபரப்பான ஒரு வதந்தி பரப்பப்பட்டிருந்தது. "அர்ச்.வியாகுல மாதா சபை கன்னியர்களால் நடத்தப்பட்டுவரும் ஒரு பள்ளியில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது!" என்பதே அந்த வதந்தி!! இது எந்த அளவிற்கு மக்களை பீதியடையச் செய்தது என்றால் பொதுமக்கள் குறிப்பாக அங்கே பயிலும் மாணவிகளுடைய பெற்றோர் பதறி, அலறி அடித்துக்கொண்டு பள்ளியை நோக்கி ஓடினார்கள். பாளை நகரமெங்கும் பதட்டம், மரணபயம் - குழப்பம்! மதியம் அனைத்துப் பள்ளிகளும் விடுமுறை அறிவித்தல் என எவ்வளவு வேதனைகள்! எவ்வளவு சிரமங்கள்!! பொது நலனில் அக்கறையற்ற மனிதர்களால் செய்யப்படும் இந்த அநீதியான காரியத்தால் எவ்வளவு பாதிப்பு!

சமுதாயத்தைப் பொதுவாக எடுத்துக்கொண்டாலும் சரி, கிறீஸ்தவ சமுதாயத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, இன்று பொதுநலன் (Common good) என்பது பெரீதும் உதாசினப்படுத்தப்படுகிறது. அனைவரும் தங்கள் சொந்த நலனையே தேடுகிறார்கள். மக்கள் மனதில், சுய நலம் - தன் விருப்பம் - தனக்கு, தான்! என்ற கருத்தே மேலோங்கி வருவதை நாம் பார்க்கிறோம். இதில் பிறர்நலம் - பிறர்சிநேகம் - பொதுநலன் - பொது நன்மையைப்பற்றிய அக்கறை அடிபட்டு போகிறது. மறைந்து போகிறது! இந்த குறைபாடு ஏன் இருக்கிறது? எப்படி வந்தது?! இன்று சமுதாயத்தில் ஏன்? கத்தோலிக்க மக்கள் மத்தியிலும் கூட பிறர்சிநேகம் என்ற புண்ணியம் மங்கிவருகிறதே? இப்படி 'சுயநலம்' என்ற குறைபாடு மேலோங்குவது ஜென்மப் பாவத்தின் விளைவு - காயம். அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள் கூட, சிறு பிள்ளையாக இருக்கும் போது சுயநலன் மிக்கவளாக பெற்றோர் வாங்கி வரும் அனைத்து விளையாட்டு பொருட்களும் தனக்கே - தன் அக்காள்மார்களுக்கல்ல என்ற மனப்பான்மை கொண்டிருந்ததாக அவளது சுயசரித்திரத்தில் அறிகிறோம்! இந்த காயம் கத்தோலிக்கப் பிள்ளை வளர்ப்பில் தேவ வரப்பிரசாதத்தால் குணமாகி, அர்ச்சிஷ்டதனம் மிளர்வதை இந்த அர்ச்சிஷ்டவளின் வாழ்விலிருந்து அறிகிறோம். நம்மிடமுள்ள இத்தகைய சுயநலச்சார்பு போன்ற தீயக்குணங்களுக்கு ஜென்மப்பாவம் நமது (மனிதர்களின்) ஆத்துமத்தில் ஏற்படுத்தி விட்ட காயம் - தோஷம் என்பதை நாம் உணர வேண்டும். ஜென்மப் பாவம் ஞானஸ்நானத்தின் போது கழுவப்பட்டாலும், அதன் **காயம் - தோஷம்** மானிட ஆத்துமத்தில் காணப்படுகிறது. இந்த உண்மையை இன்று கத்தோலிக்கர்கள் கூட ஏற்க மறுக்கிறார்கள்! ஏன்?.. அதிமேற்றிராணியார் வந்.மார்சல் லெஃபவர் ஆண்டகை தமது திறந்த மடலில் எழுதியிருப்பது போல் (காண்க - 3ம் பக்கம்) ஞானஸ்நானத்தைப் பற்றிய தவறான விளக்கமும், மாற்றப்பட்டுவிட்ட ஞானஸ்நான சடங்குகளும் ஜெபங்களுமே! இன்று குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் நவீன முறையில் கொடுக்கும்போது பங்கு குரு அளிக்கும் விளக்கம் "ஜென்ம பாவம்" இருப்பதை மறுதலிக்கும் வகையில் இருக்கின்றது.

## உலக இளைஞர் தின அவசங்கை!

சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் பாப்பரசர் கலந்து கொண்டு நடந்து முடிந்துபோன "உலக இளைஞர் தினம்" பற்றி சில கருத்துக்களைத் தெரிவிக்கவும் விரும்புகிறேன். சிலர் இதைப் பற்றி கூறுகையில் அங்கு சில நாட்களில் "பாரம்பரிய பூசை" செய்யப்பட்டது என்று பெருமிதப்பட்டுக் கொண்டார்கள். ஆனால், உண்மையான நிலை என்னவென்றால், எப்படி ஒரு மிருகக்காட்சி சாலையில் விதவிதமான மிருகங்களும், பறவைகளும் வைக்கப்பட்டிருக்குமோ அதுபோல, பாரம்பரிய பூசையோடு **Rock and Roll** பூசை, **Jazz** பாடல்கள், நடனங்கள் எல்லாம் நடத்தப்பட்டன! கடைசி நாளில் பாப்பானவர் செய்த பூசையில் ஃப்ஜிய் **(Fijii)** நாட்டு இளைஞர்களும், குருமாணவர்களும் சுவிசேஷம் வாசிக்கப்படுவதற்கு சுவிசேஷ வாசகங்கள் அடங்கிய புத்தகத்தை எடுத்துக்கொண்டு அவர்களது பழங்கால முறையில் நடனமாடிக் கொண்டு வரும் அவசங்கையும் அலங்கோலமான நிகழ்ச்சியும் நடைபெற்றது! அச்சமயத்தில், இந்த குருமாணவர்கள் அந்நாட்டு பழங்குடிகளைப் போல அரை குறை உடையை உடுத்துக்கொண்டு வந்தது பெரும் ஆபாசம்!! இது எத்தகைய நிந்தை அவசங்கை!! திரிதெந்தீன் பாரம்பரிய பூசையில் குருவானவர் அனுசரிக்க வேண்டிய பல கிரியைகளும், பாவனைகளும் **(Postures and Rubrics)** இருக்க, நவீன பூசையிலோ எதுவும் வேண்டாம், எப்படியும் இருக்கலாம், என்னமும் சொல்லலாம் என்ற அவலநிலை உள்ளது! என்றுதான் இதற்கு விடிவுகாலம் வரும்! திருச்சபையின் தாயான மகா பரிசுத்த கன்னிமரியாயிடம் மன்றாடுவோமாக!

## நேயர்களிடம் வேண்டுகோள்!

இறுதியாக வாசகர்களே, நமது 'Salve Regina' பத்திரிகை மென்மேலும் மெருகடைந்து ஆன்ம பயன்களை விளைவிக்கும்படியாக வேண்டிக்கொள்ளுங்கள். அதோடு உங்கள் தாராள நிதி உதவியையும் தந்து இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவர உதவுங்கள். விலைவாசி உயர்ந்திருப்பது நீங்கள் அறியாத ஒன்றல்லவே!

(தொடர்ச்சி பக்கம் 10 காண்க)

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

**- அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -**


(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய "குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல்" என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

## (8) புதிய வடிவத்தில் தேவதிரவிய அநுமானங்கள்!

## ஞானஸ்நானம்

கத்தோலிக்க விசுவாசத்தை நன்கு அனுசரித்து வரும் கத்தோலிக்கர்களானாலும் சரி, அல்லது எப்போதாவது, சில முக்கிய நாட்களில் மட்டுமே ஆலயம் பக்கம் தலைகாட்டும் கத்தோலிக்கர்களானாலும் சரி இப்போது ஞானஸ்நானம் என்பது என்ன? என்பது போன்ற அடிப்படையான கேள்விகளைக் கேட்கிறார்கள்.

இது ஒரு புதிய நிலைமை! ஏனென்றால் சற்று கொஞ்ச காலத்திற்கு முன்பு வரை எவரும் இத்தகைய கேள்விகளைக் கேட்பதில்லை. அவற்றிற்கான பதிலை நன்கு அறிந்தவர்களாக இருந்தனர். ஞானஸ்நானம் என்பது என்ன? அது ஆன்மாவில் ஏற்படுத்தும் விளைவு - பலன என்ன என்பதை அறிந்திருந்தனர். ஞானஸ்நானம் நம்மை நம்மோடு பிறக்கும் ஜென்மப்பாவத் தோஷத்திலிருந்து நம்மைக் கழுவுகிறது என்பதை தங்கள் தாய் தந்தையிடமிருந்து பிள்ளைகள் அறிந்திருக்கிறார்கள்.



ஆனால் இப்பொழுதோ ஜென்மப்பாவத்தைப்பற்றி யாரும் எதுவும் பேசுவதில்லை. ஆலய பிரசங்கங்களிலும், வேறு கூட்டங்களிலும் ஞானஸ்நானம் பெற்றவர் தங்கள் வாழ்வில் கட்டிக்கொள்ளும் பாவங்கள் - குற்றங்களைப்பற்றி பேசப் படுகிறதே தவிர நாம் பிறப்பாலேயே கொண்டிருக்கும் ஜென்மப்பாவத்தைப்பற்றி பேசுவதில்லை!

ஞானஸ்நானமானது நம்மை கடவுளோடு இணைக்கும் அநுமானமாகவும், அதற்கும் மேலாக ஆலயத்தில் கூடியிருக்கும் சமூகத்தினரோடு இணைக்கும் நிகழ்ச்சியாகத்தான் இப்போது கருதப்படுகிறது. சில இடங்களில் நடைபெற்று வரும் வழி பாடுகளின் தொடக்கத்தில் புகுத்தப்படும் "வரவேற்புச் சடங்கின்" விளக்கமும் இதுதான்! இது ஏதோ தனிப்பட்ட நபரின் முயற்சியல்ல. மாறாக, "பலநிலை ஞானஸ்நானம்" என்னும் தலைப்பில் தேசிய மேய்ப்புபணி வழிபாட்டு மையம் வெளியிட்டுள்ள பிரசுரங்களில் காணப்படும் விளக்கமாகும். இது நீடித்த அல்லது ஒத்திப்போடும் ஞானஸ்நானம் (Deferred Baptism) என்று அழைக்கப்படுகிறது. இதில் "வரவேற்புச் சடங்கிற்குப்" பிறகு 'முன்னேறுதல்' பின்பு 'விண்ணப்பித்தல்' என பல கட்டச் சடங்குகள் இடம் பிடிக்கின்றன. குழந்தை தாமே சுயமாக முடிவெடுக்கும் வயதை (அதாவது 18 வயது அல்லது அதற்குமேல்) அடைந்த பிறகு, அது விரும்புவதைப் பொருத்து தேவதிரவிய அநுமானம் (ஞானஸ்நானம்) நிறைவேற்றப்படும் அல்லது நிறைவேற்றப்படாமல் விடப்படும். நவீன சங்கசபையில் புகழ்பெற்ற இறையியல் பேராசிரியர் ஒருவர் கிறீஸ்தவர்களை இரு பிரிவுகளாக பிரிக்கிறார். விசுவாச மற்றும் வேத கலாச்சாரத்தின் மீது நம்பிக்கை கொண்டு அவற்றை அனுசரிக்கும் கிறீஸ்தவர்கள் என்றும், பெருவாரியானவர்கள் சாதாரண பெயரளவுக் கிறீஸ்தவர்கள் என்றும் பிரிக்கிறார். இத்தகைய பெயரளவு கிறீஸ்தவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கேட்கிறார்கள். இத்தகையோர் தொடக்க தயாரிப்புக் கூட்டங்களின்போது இனங்கண்டு கொள்ளப்பட்டு வரவேற்புச் சடங்கிற்குப் பின் தொடராமல் தடுக்கப்படுகிறார்கள். இத்தகைய வழக்கம் நமது கலாச்சார சூழ்நிலைக்கும்

நாகரீகத்திற்கும் பொருத்தமானது என்று இந்த பேராசிரியர் கருத்து தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் பிரான்ஸ் நாட்டில் **சோம்** என்ற மாவட்டத்தில் ஒரு பங்கு குரு குழந்தைகளுக்கு புதுநன்மை வழங்குவதற்கு, அவர்களது ஞானஸ்நான சான்றிதழைக் கேட்டார். அவைகளைக் கவனித்துப் பார்த்ததில் இரண்டு குழந்தைகளில் ஒருவர் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றிருப்பதைக் கண்டுபிடித்தார். பெற்றோர்களோ தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுவிட்டதாகவே எண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்தக் குழப்பத்திற்கு மேலே குறிப்பிட்ட பல தினுசாக ஞானஸ்நானத்தை பிரித்ததே காரணம். அவற்றில் விசுவாசத்தோடு மெய்யான ஞானஸ்நான சடங்கு முறையைக் கொண்டிருந்தது மட்டுமே உண்மையான தேவதிரவிய அநுமானமாகும்.

சில சமயங்களில் பங்குகளில் வெளியிடப்படும் வெளியீடுகளில் ஆலோசனைகள், கருத்துக்கள் பல கிறீஸ்தவ பெயரில் கையெழுத்துடனோ அல்லது கையெழுத்தில்லாமலோ பிரசுரிக்கப்படுகின்றன. அதில் ஆலன் மற்றும் ஈவ்லின் என்பவர்கள் கெடுதியாக வெளியிடப்பட்ட கருத்துக்களை உதாரணமாகக் கொள்வோம். “ஜென்மப்பாவத்தை புதுமையின் மூலம் போக்கடிக்க ஞானஸ்நானம் ஒன்றும் மாய வித்தையல்ல. மீட்பு முழுமையானது, இலவசமானது, அனைவருக்குமானது என்பதை நாம் நம்புகிறோம். சர்வேசுரன் எல்லா மனிதர்களையும் எந்தவித நிபந்தனையுமின்றி அவரது அன்பில் நிலைநிறுத்தியுள்ளார். நமக்கு ஞானஸ்நானம் பெறுவதானது, நமது வாழ்வை மாற்றிக் கொள்ளும் தீர்மானமாக உள்ளது. இத்தகைய தனிப்பட்ட முடிவை நமக்கு நம்மைத் தவிர வேறு யாராலும் எடுக்கமுடியாது. இத்தகைய மனப் பூர்வ தீர்மானத்தை நிறைவேற்ற நமக்கு சில அறிவுரைகள் தொடக்கத்தில் தேவைப்படுகின்றன” என்று வரிகள் சொல்கின்றன.

இது எவ்வளவு பயங்கரமான தப்பறையாக இருக்கிறது! இதன் மூலம் அவர்கள் மழலை ஞானஸ்நானத்தை தவிர்க்கும் மற்றுமொரு செயலுக்கு நியாயம் கற்பிக்கிறார்கள். இது புராட்டஸ்டாண்டாரோடு திருச்சபையின் பாரம்பரிய போதனைகளை மறுக்கும் செயலாகும். 4-ம் நூற்றாண்டிலேயே அர்ச். அகுஸ்தினார், “குழந்தை ஞானஸ்நானம் ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல. அது அப்போஸ்தலிக்க காலந்தொட்டே நிலவிவந்த பாரம்பரிய பிரமாணிக்கமுள்ள செயல். அதனாலேயே எழுதப்படாத ஆவணமில்லாத பட்சத்திலும் இது உண்மையின் சட்டத்தைக் கொண்டுள்ளது” என்று கூறுகிறார். கி.பி. 251-ல் கூடிய கார்தெஜ் சங்கமோ “குழந்தைகள் பிறந்து 8 நாட்களுக்கு முன்பாகவே ஞானஸ்நானம் வழங்கப்படவேண்டும்” என்று போதிக்கிறது. 1980 நவம்பர் 21-ல் விசுவாச சத்தியத்திற்கான சங்கம் வெளியிட்டுள்ள மேய்ப்பு பணி சார்ந்த போதனையில்கூட என்றும் நிலைத்து நிற்கும் பாரம்பரியச் சட்டத்தின் அடிப்படையில் குழந்தை ஞானஸ்நானம் நினைவுப்படுத்தப் பட்டுள்ளது. இந்த விவரங்களை எல்லாம் நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும். ஏனெனில் யாரேனும் உங்கள் குழந்தைகளை வரப்பிரசாத வாழ்வில் பங்கடைவதை மறுக்கும் காரியத்தைச் செய்தால் அதற்கு மறுப்பு தெரிவிக்கவும், அது ஒரு பரிசுத்த உரிமையென்பதை நீங்கள் வலியுறுத்தவும் தெரிந்திருக்கவேண்டும். குழந்தை வளர்ப்பில் அவர்களுக்கு தேவையான சத்துள்ள உணவு வழங்கவோ அல்லது நோயின் காரணமாக அவர்களுக்குச் செய்யவேண்டிய அறுவை சிகிச்சை செய்வதற்கோ அவர்கள் 18 வயது வரும் வரை எந்த பெற்றோரும் காத்திருப்பதில்லை. இவற்றிற்கே இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கும்போது சுபாவத்திற்கு மேலான நிலையில் பெற்றோரின் கடமை மிகவும் பெரியது. விசுவாசம் மேன்மையாய் அடங்கியுள்ள இத்தேவதிரவிய அநுமான விஷயத்தில் குழந்தைகள் தங்களால் எதுவும் செய்யமுடியாத பட்சத்தில் அவைகளை அவர்களுக்கு வழங்காமல் பிந்திப்போடுவது என்பது, அவர்களது நித்திய வாழ்வை பறிப்பது என்ற செயலைச் செய்வதாகும்.

இத்தகைய அசாதாரண முறையின் விளைவுகளை நாம் இன்று கண்கூடாகப் பார்க்கலாம். பாரீஸ் மேற்றிராசனத்தில் 1965-ம் ஆண்டில் பிறந்த இரண்டு குழந்தைகளில் ஒன்று ஞானஸ்நானம் பெற்றதாக இருந்தது. ஆனால் 1976-ல் அது நான்கில் ஒன்றாக ஆகியது. இதை ஆராய்ந்த ஒரு குரு எந்தவிதமான தயக்கமுமின்றி இதை அறிவிக்கிறார். 1965-ல் ஞானஸ்நானத்தின் எண்ணிக்கை 450 ஆக இருந்தது. 1976-ல் அது 150 ஆகக் குறைந்துள்ளது. இது பாரீசில் மட்டுமின்றி பிரான்ஸ் நாடு முழுவதும் பரவியுள்ளது! 1970-ல் ஞானஸ்நானம் பெற்றவர்களின் எண்ணிக்கை 596, 673 ஆக இருந்தது. அது 1981-ல் 530, 385 ஆக குறைந்துள்ளது. ஆனால் அவ்வாண்டில் (1981) பிரான்ஸில் பிறந்தோர் எண்ணிக்கை மட்டும் 30 லட்சமாக உயர்ந்துள்ளது! ஞானஸ்நானம் என்ற தேவதிரவிய அநுமானத்தைப் பற்றிய சரியான அறிவு இல்லாமையே இவ்வீழ்ச்சிக்குக் காரணமாகும். ஞானஸ்நானம் ஜென்மப்பாவத்தை போக்கக் கூடியது என்பதை மறுதலித்துப் பின்னர் மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதில் தரப்படுவதில்லை. ஞானஸ்நானம் என்றால் என்ன? அதனால் நமக்கு என்ன பயன்? என்ற கேள்விகளுக்கு தக்க பதில் அளிக்கப்படாததாலும், அதன் இன்றியமையாமை - அவசியம் பற்றி மக்களுக்குப் போதிக்கப்படாததாலும் அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை துணிவுடன் தள்ளிப்போடுகின்றார்கள். குழந்தையே வளர்ந்து பெரியவனாகி எந்த கட்சியில் சேரலாம் என்று தீர்மானிப்பதுபோல திருச்சபையில் சேரப்போகிறதா அல்லது வேறு சபைகளில் சேரப்போகிறதா என்ற தீர்மானிக்கட்டும் என்ற மனநிலை மக்களிடையே தோன்றியுள்ளது! (தொடரும்)

## ஞானஸ்நானம் ஆவதென்ன?

**ஜென்ம பாவத்தையும் கர்மப்பாவத்தையும் போக்கி நம்மை சர்வேசுரனுக்கும் திருச்சபைக்கும் பிள்ளைகளாக்குகிற தேவதிரவிய அநுமானமே ஞானஸ்நானம்.** *(சின்னக் குறிப்பிடம் ஏழாம் பிரிவு எண். 85.)*

# தேவ ஆராதனை முறைமை

## தேவ ஆராதனை உடுப்புகள் (தொடர்ச்சி)

சர்வேசுரனுடைய கட்டளைப்படி, யூத குருக்கள் ஆலயத்தில் நைவேத்தியங்களைச் செய்யும் காலத்தில் விசேஷ உடுப்புகளை அணிந்திருந்தார்கள். திருநாட் கொண்டாட்டங்கள், தபசுகாலங்கள், இவைகளுக்கேற்ற வெவ்வேறு உடைகளை அவர்கள் தரித்துக்கொண்டதாக வேதாகமத்திலிருந்து அறிகிறோம்.

முதன்முதல் கிறீஸ்தவ ஆராதனைச் சடங்குகளுக்கு விசேஷ உடுப்புகள் குறிக்கப்படவில்லை. உரோமை ஜனங்கள் சாதாரணமாக அணிந்துவந்த ஆடைகளே ஆராதனைக்கும் வழங்கப்பட்டன. இவைகளில் சில சாதாரண ஜனங்களுடையன; சில உரோமைப் பிரபுக்களுடையன.


உலகத்தில் மக்களுடைய உடையில் காலக்கிரமத்தில் பலவித மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும், திருச்சபை மனிதருடைய அச்சாதாரண உடைகளே ஆராதனைக்கு ஏற்றனவென்று ஆரம்பத்தில் திட்டஞ்செய்தது.

ஆண்டவருடைய பாடுகளின் அடையாளங்களையும், அப்பாடுகளின் பயனாய் அநுசரிக்க வேண்டிய புண்ணியங்களையும் இவ்வுடுப்புகள் மூலமாகத் திருச்சபை நமக்கு அறிவுறுத்துகிறது. கிறீஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள் என்று அர்ச். சின்னப்பர் சொல்லுவதுபோல் நமது ஆத்தும ஆடை கிறீஸ்துவே. அவரை அணிந்துகொண்டு அவருக்கு விரோதமானவைகளைக் களைந்துவிடவேண்டும்.

இப்பூசை உடுப்புகள் வெறும் அழகுக்கல்ல, கிறீஸ்துவ நடத்தைக்கு அடையாளமும் தூண்டுகோலுமாயிருக்கின்றன. அவற்றிற்கேற்ற ஜெபங்களைச் சொல்லிக்கொண்டே குரு அவற்றை அணிந்துகொள்ளுகிறார்.

### 4. கைப்பட்டு (Manipulam)

**அமைப்பு:** இது நீண்ட சதுர வடிவுள்ள சிறு வஸ்திரம். நடுவில் சிலுவை அடையாளமும் இரு மூலைகளில் நீண்ட நாடாக்களும் உண்டு. குரு இதை முதலில் சிரசின்மேல் வைத்துப் பின்னர் கீழே இறக்கிக் கழுத்தைச் சுற்றி, நெஞ்சின்மேல் குறுக்கேயிட்டு நாடாக்களால் இடுப்பில் கட்டிக்கொள்ளுகிறார்.



**ஆரம்ப சரித்திரம்:** இது குளிர் தேசங்களில் மனிதர்கள் தொண்டையையும் கழுத்தையும் குளிரினின்று பாதுகாப்பதற்கு அணிந்துகொண்ட துணியாம். வேலை செய்யாமல் வீட்டிலிருக்கையில் தோளின் மேலேயே கிடக்கும். இன்றும் இதைச் சன்னியாசிகள் அணிந்திருக்கிறதைக் காணலாம்.

**கிறீஸ்துவின் ஞாபகம்:** நமது திவ்விய இரட்சகருடைய கண்களை மூடி அடித்துப் பரிகாசஞ்செய்து, அடித்தவன் யாரென்ற கேட்டதை ஞாபகப்படுத்தும்.

**நமக்கு ஞான அடையாளம்:** நமது "இரட்சணியத்தின் தலைசீரா" (எபேசி. 6:17). சிரசில் வைப்பது பூசை வேளையில் வீணான அல்லது தகாத நினைவுகள் நம்மை அணுகாமலிருக்க வேண்டுமென்பதையும், கழுத்தைச் சுற்றிக் கட்டுவது, நமது நாக்கை அடக்கி ஆளவேண்டுமென்பதையுங் குறிக்கும்.

**அணியும்போது ஜெபம்:** ஆண்டவரே, பசாசின் தாக்குதல்களை எதிர்த்து வெல்லுவதற்காக இரட்சணியத் தலைச்சீராவை என் சிரசின்மீது வைப்பீராக.

### 2. ஆல்பா (Alba): வெள்ளை நெடு அங்கி

**அமைப்பு:** ஆடவரும் பெண்டிரும் பாதம் வரையில் அணிந்துகொள்ளத் தக்கதோர் நீண்ட வெள்ளை அங்கி.



**ஆரம்ப சரித்திரம்:** மனிதர்கள் சாதாரணமாய் வெய்யில் காலத்தில் மற்ற உடுப்புகளின்மேல் அணிந்துகொண்ட மேல்சட்டை. உரோமை இராச்சியத்தில், பிரபுக்களும் அதிகாரிகளும் இதனை அணிந்துகொள்வது வழக்கம்.

**கிறீஸ்துவின் ஞாபகம்:** திருப்பாடுகளின் சமயத்தில் ஏரோதரசன் நமது ஆண்டவரை அவமானப்படுத்துவதற்காக அணிவித்த வெள்ளை அங்கியைக் குறிக்கின்றது.

**நமக்கு ஞான அடையாளம்:** கிறீஸ்துவின் திரு இரத்தத்தால் பரிசுத்தமான ஆத்துமத்தின் தூய்மைக்கு அடையாளம். பலிப்பூசையை ஒப்புக்கொடுக்கப் போகிறவர்களுக்கு இருக்கவேண்டிய ஆத்தும சுத்தத்தையும், நாம் இப்பலியினால் ஆத்தும இருளினின்றும் நீங்கி ஞானவெளிச்சத்தை அடைந்ததையுங் குறிக்கும்.

(8-ம் பக்கம் பார்க்க)

# ‘Sanguis Martyrum Semen Christianorum’

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது தங்களது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)

## (4) கர்த்தூசிய சபை துறவிகள்

*இங்கிலாந்து தேசத்தில், அரசன் 8-ம் ஹென்றி ஏற்படுத்திய வேதகலாபனையில் முதன்முதலில் பலியானவர்கள் கர்த்தூசிய சபை துறவிகளே! பாப்பரசரை மறுத்து தன்னையே இங்கிலாந்திலுள்ள கத். திருச்சபையின் தலைவன் என பிறப்பித்த அரச சட்டத்தை மறுத்த அப்போதைய லண்டன் கர்த்தூசிய சபை மடத்தின் அதிபராயிருந்த சங். ஜான் ஹாட்டன்* (John Houghton) *மற்றும் துறவிகளான அகஸ்டின் வெப்ஸ்டர்* (Augustine Webster), *இராபர்ட் லாரன்ஸ்* (Robert Lawrence). *அவர்களோடு அர்ச். பிரிஜித்தம்மாள் சபையைச் சேர்ந்த முனைவர் ரிச்சர்ட் ரெய்னால்ட்* (Dr. Richard Reynolds) *ஆகியோர் கொடூரமான வேதசாட்சியமடைந்தனர். அவர்களது வேதசாட்சியமே இங்கிலாந்து பிரிவினையின் முதல் பலியாக அமைந்தது.*



*கடுமையான ஒழுங்கிற்கும், ஜெபதவ வாழ்விற்கும் புகழ்பெற்ற கர்த்தூசிய சபை இங்கிலாந்தில் வேரூன்றி, அத்தேசமெங்கிலும் தமது மடங்களைக் கொண்டிருந்தது. அச்சபைத் துறவியர்கள் தங்களது பரிசுத்த ஜீவியத்தின் நிமித்தமாக மக்களிடையே மிகுந்த செல்வாக்கும், நன்மதிப்பும் பெற்று விளங்கினார்கள். அதுவே அவர்களுக்கு ஆபத்தாக அமைந்தது!*

*அது எப்படியெனில், அரசன் 8-ம் ஹென்றி தனது மனைவியை விலக்கிவிட்டு, ஆன் பொலின் என்பவளை திருமணம் செய்து கொள்ள பாப்பரசர் மறுத்ததால் ஆத்திரம் கொண்டான். பாப்புவின் எதிர்ப்பையும் மீறி தனது முதல் திருமணத்தை ரத்து செய்துவிட்டு அவளைத் திருமணம் செய்து கொண்டான். அதோடு 2-ம் திருமணத்தில் பிறக்கும் குழந்தைகளே இங்கிலாந்தில் அரசராவார்கள் என்ற வாரிசுரிமைச் சட்டத்தையும் பிறப்பித்தான். இதனை எதிர்ப்பவர்கள் “தேசத்துரோகி” என்று குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.*

*மக்களிடையே பெரும் மதிப்பும், மரியாதையும் பெற்றிருந்த கர்த்தூசிய சபையினரை வயப்படுத்தி அவர்களது ஆதரவை பெற்றுக் கொண்டால், மற்றவர்களும் எளிதாகக் கீழ்ப்படிந்து விடுவார்கள் என்று எண்ணி அதற்கான முயற்சியில் இறங்கினான். அரச அதிகாரிகள் தங்களிடம் விசாரித்து ஆதரவை கேட்டதும் துறவியர் சுதாரித்துக் கொண்டார்கள்.*

### அர்ச். ஜான் ஹாட்டன்

*அப்போது லண்டனிலுள்ள கர்த்தூசிய மடத்தின் தலைமைப் பொறுப்பி லிருந்தவர் சங். ஜான் ஹாட்டன் சுவாமி. இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பயின்று குருப்பட்டம் பெற்றவர். 4 ஆண்டுகள் மேற்றிராசன குருவாக ஊழியம் புரிந்த அவர் கடின ஜெப, தவ வாழ்வை விரும்பி கர்த்தூசிய சபையில் சேர்ந்தார். 20 ஆண்டுகள் அச்சபையில் தாழ்ச்சிய பிரமாணிக்கமாக வாழ்ந்து புண்ணியத்தில் சிறந்த அவர் மிகுந்த தாழ்ச்சியும், பொறுமையும் உடையவர். இனிமையான பேச்சும், இனிய வதனமும், மிகுந்த அடக்கமும் கொண்டவரான அவர் சில மாதங்களுக்கு முன்னர் தான் லண்டன் கர்த்தூசிய சபை அதிபராக நியமனம் பெற்றார்.*

*தன்னை விசாரித்த அரசு அதிகாரிகளிடம் அரசனின் சட்டத்தில் எவ்வித நியாயமும் இல்லாத தையும், அது திருச்சபையின் போதனைகளுக்கு விரோதமாகவும் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். அதனால் கோபமடைந்த அதிகாரிகள் அவரையும் அவரது உதவியாளர் சங். ஹம்ஃபிரி மிட்டில்மோர் என்பவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.*

இதற்கு எதிர்ப்பு வரவே, சர்வேசுரனின் சட்டம் அனுமதிக்கும் அளவில் என்ற வார்த்தைகளையும் சேர்த்து வாக்குறுதியை தரச்செய்து விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் விடுதலைக்கு முந்திய இரவில் இன்னும் 18 மாதங்களுக்குள் நீர் இங்கு வருவீர் என்று கனவில் உரைக்கப்பட்டதால் தமது விடுதலை தற்காலிகமானதே என்பதை உணர்ந்து கொண்டார். அவர் எதிர்பார்த்த படியே அனைத்தும் நிகழ்ந்தன.

அது என்னவெனில்: மறு ஆண்டில், முந்தைய சட்டத்தைவிட மோசமான சட்டம் ஒன்று அமலுக்கு வந்தது! அதன்படி பாப்பரசர் மறுக்கப்பட்டார். இங்கிலாந்தின் கத்தோலிக்கத் திருச்சபைக்கு தலைவர் அரசனே!! இதனை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தேசத் துரோகிகள், மரணத்துக்குரியவர்கள் என்று அறிவிக்கப் பட்டது. இந்தப் பிரிவினைச் சட்டத்திற்குக் கீழ்ப்படிவது சர்வேசுரனுக்கே துரோகம் செய்வது என்பதாகுமாதலால் துறவிகள் அதனை மறுத்து விட்டனர். அதற்குக் கீழ்ப் படிவதைவிட உயிர் துறப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்தனர். மூன்று நாட்கள் ஜெபத்திலும் தவத்திலும் ஈடுபடுத்தி தங்களையே தயார்படுத்திக் கொண்டனர். அரச சட்டத்தை மறுத்ததால் 1535 ஏப்ரல் 20-ம் நாள் சிறைப்பிடிக்கப்பட்டனர். டவர் சிறையில் அடைக்கப் பட்ட அவர்களோடு அர்ச். பிரிஜித்தம்மாள் சபை துறவியும், "**இங்கிலாந்திலேயே மிகச்சிறந்த அறிஞர்**" என்று அழைக்கப்பட்டவருமான சங். ரிச்சர்ட் ரெய் னால்ட் சுவாமி என்பவரும் சிறையில் அடைக்கப்பட்டார். பெயருக்கு விசாரிக்கப்பட்டு தேச துரோகம் செய்த குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டனர்.

## கொடூர வேதசாட்சியம்!

1535 மே 4. அதுதான் மரண தண்டனைக்கு குறிக்கப்பட்ட நாள். அன்று காலை கொலை களத்துக்கு கொண்டுசெல்ல சிறை வாயிலுக்கு வந்தவர்களை அரசு அதிகாரிகள் இழிவுபடுத்த வேண்டும் என்று விரும்பி னார்கள். எனவே அவர்களை தரையில் கிடத்தி குதிரை களோடு கட்டி இழுத்துச் சென்றனர். முந்தின இரவு முழுவதும் பெய்த மழையால் சகதியாகிவிட்டிருந்த சாலைகளில் ஈவு இரக்கமில்லாமல் இழுக்கப்பட்ட துறவிகள், ஆங்காங்கே இருந்த கற்களால் கிழிக்கப்பட்டு அகோர வேதனை அனுபவித்தனர்.

அவர்கள் கொலைக்களத்திற்கு அழைத்துச்செல் லப்படும்போது மிகுந்த மகிழ்ச்சியுடனும், முகமலர்ச்சி யுடனும் காணப்படுவதை தாம் இருந்த தாம் இருந்த பெல் டவர் சிறையின் ஜன்னல் வழியாகக் கண்டு வியந்த அர்ச். தாமஸ் மோர், தம்மைக் காணவந்த தமது மகள் மார்க்கரேட்டிடம் அவர்களைச் சுட்டிக்காட்டி, "பார் மகளே! இந்த ஆசீர்வதிக்கப்பட்ட துறவிகள் கொலைக் களத்திற்கு திருமணத்திற்குச் செல்லும் மணமகன்களைப் போல் மிகுந்த உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் செல்வதைப் பார்!" என்று கூறினார். இளம் வயதில் தாமும் ஒரு கர்த்தூசிய துறவியாக வாழ விரும்பி, அந்தப் பாக்கியம்



**கர்த்தூசிய துறவிகள் கொலைக்களத்திற்கு இழுத்துச்செல்லப்படும் காட்சி.**

தமக்கு அருளப்படாத ஏக்கம் தமது குரலில் தொனிக்க துறவியரின் வீர விசுவாசத்தைப் புகழ்ந்தார்.

டவர் கொலைக்களத்திற்கு இழுத்துவரப்பட்ட துறவிகள் உடலெல்லாம் உராய்ந்து இரத்தம் கசிய வேதனையுற்றிருந்தாலும் ஜெபித்த வண்ணம் நின்றனர்.

## முதல் வேதசாட்சியம்!

லண்டன் கர்த்தூசிய மடத்தின் தலைவரான சங். ஜான் ஹாட்டன் சுவாமியே முதலில் வேதசாட்சிய முடிபெற தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறு வண்டியின் மீது தனது துறவற உடையோடு நிறுத்தப்பட்ட அவர், வழக்கப் படி தம்மிடம் மன்னிப்புக் கேட்கும் கொலைஞனை அன்போடு அரவணைத்து ஆசீர்வதித்தார். பின்னர் வண்டி தூக்குமேடைக்கு நகர்த்தப்பட கடைசி தடவை வாய்ப்பாக அரசனின் அநீத சட்டங்களை ஏற்றுக் கொள்கிறீரா? என்று கேட்கப்பட்டது. அதற்கு மறுப்பு தெரிவித்த அவர், தெளிவானக் குரலில் சுற்றிலும் கூடியிருந்த மக்களை நோக்கியவாறு, "ஓ எல்லாம் வல்ல சர்வேசுரன் முன்பாக வும், இங்கே கூடியிருக்கும் மக்கள் முன்பாகவும், இந்த ஆபத்தான தீர்ப்பால் பொது இடத்தில் பகிரங்கமாக மரணமடையவிருக்கும் நான் மேன்மைக்கும் மரியாதைக்கு முரிய அரசனின் விருப்பத்திற்கு அடிபணிய மறுப்பதாக அறிவிக்கிறேன்! இது எதிர்ப்பு மனப்பான்மையினாலோ, வெறுப்பினாலோ அல்ல. மாறாக எல்லாம் வல்லவரான சர்வேசுரனை வருத்தப்படுத்திவிடுமே என்ற அச்சத்தினாலே மட்டுமே இதைச் செய்கிறேன்... அரசனும், பாராளுமன்ற மும் கட்டளையிட்டுள்ளவை நமது பரிசுத்த தாய் திருச்சபை யின் கட்டளைக்கு - போதனைக்கு நேர் விரோதமானது.

எனது மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு சொல்கிறேன். திருச்சபை கற்பிக்கும் சத்தியங்களில் ஒன்றையேனும் மீறுவதற்குப் பதிலாக எத்தகைய கொடூர வேதனைகளுக்கும் நான் உட்பட ஆசிக்கிறேன். அதற்குத் தயாராகவே இருக்கிறேன். எனக்காக ஜெபியுங்கள், எனது இந்த சகோதரர்களுக்காகவும் ஜெபியுங்கள்!'' என்று கூறினார். பின்னர் இறுதியாக ஜெபிக்க அனுமதிக் கும்படி கேட்டு 30வது சங்கீதத்தை எடுத்து வாசித்தார். "ஓ ஆண்டவரே... உமது கரங்களில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன்...'' என்ற மன்றாட்டோடு மரணத்தை எதிர் கொள்ளத் தயாரானார்.

முடிச்சு இறுகி உடனே மரணமடைந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு தடித்த முரட்டுக் கயிறு சட்டத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதில் அவரது கழுத்து மாட்டப் பட சிறை உயர் அதிகாரி சைகை காட்ட அவர் நின்றிருந்த சிறு வண்டி வேகமாக நகர்த்தப் பட்டுவிட யாருக்குமே எப்போதும் தீங்கு நினைக்காத உன்னதமான அந்த துறவி யின் கழுத்தை கயிறு இறுக்கியது! உடலில் உயிர் இருக்க அது கயிற்றில் தொங்கியது. அதன் பின்புதான் கொடிய நாடகம் அரங்கேறியது. ஆம். உடனே கயிறு வெட்டப்பட துறவியன் உடல் வேகமாக கீழே தரையில் விழுந்தது. ஆனாலும் அவர் உயிர் துறக்கவில்லை! இப்போது அவரது பரிசுத்த ஆடை கிழித்து அகற்றப்பட்டு, உடல் ஒரு சிறு மேடையில் கிடத்தப்பட்டது. கொலைஞர்கள் நீண்ட கூரிய கத்தி யால் அவரது வயிற்றைக் குத்தித் திறந்தார்கள். இரத்தம் பீறிட்டுப் பாய, வயிற்றின் உள்ளே யிருந்த பகுதிகள் எடுக்கப்பட்டு தயாராக வைக்கப் பட்டிருந்த நெருப்பில் போடப்பட்டன. இத்தகைய கொடூர உபாதையிலும், வேதனையிலும் உயிர்துறக்காதிருந்த சங். ஜான் ஹாட்டன் சுவாமியின் வாய் ஜெபத்தால் அசைந்தது! "மகா பரிசுத்த சேசுவே, இந்த நேரத்திலும் என்மீது இரக்கமாயிரும்'' என்ற மன்றாட்டு அவரிடமிருந்து வெளிப்பட்டது. அப்போது இறுதியாக கொலைஞன் அவரது நெஞ்சுக் கூட்டிலிருந்து இருதயத்தைப் பிடுங்கினான். அப்போது... "ஆ! நல்ல சேசுவே! எனது எளிய இதயத்தால் என்ன செய்யப்போகிறீர்!'' என்ற இறுதி வார்த்தைகள் அவரிடமிருந்து வந்ததை அருகிலிருந்த அந்தோணி ரெங்கியூஸ் என்ற ஜெர்மானியர் கேட்டார். (பின்னர் அவரே ஜெர்மானிய Wuryburg மேற்றிராசனத்தின் துணை ஆயரானார்). இப்போது எல்லாம் முடிந்தது. ஆம்! ஆங்கில நாட்டின் கலாபனையின் முதல் பலி நிறைவேற்றப்பட்டுவிட்டது!! அதன் மூலம் அர்ச். ஜான் ஹாட்டன் முதல் வேதசாட்சியானார்.

தங்களது மடத்து அதிபரின் கொடூர மரணத்தைப் பார்த்த பின்பாவது பயந்து மற்ற துறவிகள் இணங்குவார்கள் என்றெண்ணி இருமாப்புக்கொண்ட அரசு அதிகாரிகள் அவர்களது வீர வைராக்கிய அசையாத உள்ளத்தைக் கண்டு வியந்து போனார்கள். இதனால் அவர்களும் தூக்கிலிடப்பட்டு உடல் வெட்டுண்டு கொலை செய்யப்பட்டார்கள். கர்த்தூசிய துறவிகளோடு முனைவர் ரிச்சர்ட் ரெய்னால்ட் சுவாமியும் வேதசாட்சிய முடி பெற்றார்.

கொல்லப்பட்ட வேதசாட்சிகளின் உடல்களை அரைகுறையாக சுட்டெரித்து நகரின் பல பகுதிகளில் மக்கள் காணுமாறு காட்சிபொருளாக வைத்தார்கள். அர்ச். ஜான் ஹாட்டனின் துண்டிக்கப்பட்ட ஒரு கரம் லண்டன் நகர் கர்த்தூசிய மடத்தின் வெளி நுழைவு வாயிலில் தொங்கவிடப்பட்டது.

**வேதசாட்சிகளான கர்த்தூசிய சபை துறவிகளே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**

**( 5-ம் பக்கத் தொடர்ச்சி)**

**அணியும்போது ஜெபம்:** ஆண்டவரே, என்னை வெண்மையாக்கி, என் இருதயத்தைத் தூய்மைப்படுத்தும்; அதனால் நான் செம்மறிப்புருவையின் திரு இரத்தத்தினால் வெண்மையாகி நித்திய சந்தோஷங்களைச் சுகிக்கக்கடவேனாக.

## 3. இடைக் கச்சை (Cingulum)

**அமைப்பு:** வெள்ளை அங்கியை நழுவாமல் சேர்த்துக் கட்ட இது உதவுகிறது. பட்டு அல்லது ஒருவித சணல் நூலால் நூற்கப்பட்டது. அந்தந்த நாளுக்குரிய பூசை உடுப்புகளின் நிறத்திலிருக்கலாம்.

**ஆரம்ப சரித்திரம்:** மேலே அணிந்திருக்கும் தாராளமான வெள்ளை அங்கி நடப்பதற்கு சிரமத்தை உண்டாக்காதபடி கட்டிக்கொண்ட இடைக்கச்சையே இது.

**கிறீஸ்துவின் ஞாபகம்:** இராப்போசன வேளையில் சீடர்களுடைய பாதங்களைக் கழுவும்போது, கிறீஸ்துநாதர் துண்டை இடுப்பில் கட்டிய கயிற்றையும், ஜெத்சமனி தோட்டத்தில் கைதியாகப் பிடிபட்டுக் கட்டப்பட்டதையும், கற்றூணில் சேர்த்துக் கட்டப்பட்டதையும் உணர்த்துகின்றது.

**நமக்கு ஞான அடையாளம்:** இடையை இறுகக் கட்டுவது ஆசாபாசத்தை அடக்கவேண்டும், அதாவது பரிசுத்த கற்பைக் காக்கவேண்டுமென்று அறிவிக்கின்றது.

**அணியும்போது ஜெபம்:** ஆண்டவரே, பரிசுத்தத்தனத்தின் கச்சையால் என் இடையைக் கட்டி, என் இடைகளில் காம அக்கினியை அணைப்பீராக. அதனால் இச்சை அடக்கமும், கற்பும் என்னில் என்றுந் தங்கியிருக்கக்கடவன.

**(தொடரும்)**

# பாவிகளுக்கு அடைக்கலமான மாதா!

பிரான்ஸ் நாட்டில் லோ (Laus) என்ற இடத்தில் பாவிகளுக்கு இரக்கத்தையும், மன்னிப்பையும் வழங்க தேவதாய் காட்சியளித்த வரலாறு.

**(1664-ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் லோ (Laus) என்ற இடத்தில் முத். பெனுவாத் (Benoite Rencurel) ரென்கூர் என்ற ஆடு மேய்க்கும் சிறுமிக்கு தேவமாதா அநேக தடவைகள் காட்சியளித்தார்கள். லோ நகரில் பாவிகளுக்கு அடைக்கலமாகத் தன்னை வெளிப்படுத்திய தேவதாய் கடந்த 334 ஆண்டுகளாக எண்ணற்ற மனந்திரும்புதல்களை நிகழ்த்தி வருகிறார்கள். லோ மாதா காட்சிகள் தேவ அன்னையின் அன்பையும், தேவ இரக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. ஆ.ர்.)**

②

### லோ பள்ளத்தாக்கு

தென் பிரான்ஸில், ஆல்ப்ஸ் மலைச் சாரலின் தோபென்யே பகுதியில் கா (Cap) நகரின் தென்கிழக்கில் அமைந்துள்ளது தான் லோ பள்ளத்தாக்கு! லோ என்றால் உள்ளூர் வழக்கில் குளம் என்று பொருள்படும். ஏனெனில் அப்பகுதி ஒரு காலத்தில் ஆழ்ந்த பள்ளமாகக் காணப்பட்டது. 17-ம் நூற்றாண்டின் மத்தியில் அப்பகுதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக 20 குடிசைகளே காணப்பட்டன. கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியாகவிருந்த அம்மக்களே தேவதாயின் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார்கள்.

மாதா காட்சி பெற்ற பெனுவாத்தம்மாள் அப்பகுதியில் தொலைவிலுள்ள புனித ஸ்டீபன் தே அவன்ஸோன் என்ற ஊரில் உத்தம கத்தோலிக்கப் பெற்றோருக்கு 1647 செப்டம்பர் 16-ம் நாளன்று பிறந்தாள். அவளது தந்தை குய்லியாயும் ரென்கூர் அவளது 7-வது வயதில் இறந்ததால், தாய் தனது நான்கு குழந்தைகளை வளர்க்க மிகுந்த சிரமங்களை மேற்கொண்டாள். அவ்வூரில் பள்ளிக்கூடம் எதுவும் இல்லாததால் அவளுக்கு எழுதப்படிக்கத் தெரியாமல் போனது. ஞாயிறு பூசையில் மட்டுமே தேவகாரியங்களை அறிய வந்தாள். அவளுக்கு வழங்கப்பட்ட எளிய ஞானோபதேசப் பாடத்தில் தேவமாதா இரக்கமுள்ள சர்வேசுரனுடைய தாய். நம்மையும் அளவற்ற விதமாய் நேசிப்பவர்கள் என்பதை அறியவந்தாள்.

12வது வயதில் குடும்பத்தின் வறுமை காரணமாக இரண்டு எஜமானர்களுடைய ஆடுகளை சேர்த்து மேய்க்கும் வேலையில் அமர்ந்தாள். ஆடுகளை பள்ளத்தாக்குகளில் மேய்த்துவந்த அவள் தனிமையில் தமக்குப் பிரியமான ஜெபமாலையைப் பக்தியோடு ஜெபிப்பாள். தேவமாதாவைக் காணவேண்டுமென்ற ஆவல் அவளது உள்ளத்தில் தோன்றலாயிற்று! எப்போதும் மாதாப் பாடல்களை பாடிக்கொண்டும் அருள்நிறை மந்திரங்களைக் கூறிக்கொண்டும் தமது நாட்களைப் கடத்திவந்த பெனுவத்தம்மாளின வாழ்வில் அந்த எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது!

அது என்னவெனில், 1664 மே மாதத்தின் ஒருநாள், இப்போது 17 வயதை நெருங்கியிருந்த பெனுவாத்தம்மாள் வழக்கம் போலவே அன்றும் தனது ஆடுகளை மேய்த்துக்கொண்டே ஜெபமாலை ஜெபித்துக்கொண்டிருந்தாள். அப்போது திடீரென அங்கே வயதான ஒரு பெரியவர் தோன்றினார். மேற்றிராணியார் உடுப்பை அணிந்தவராகக் காணப்பட்ட அவர் அவளிடம், என் மகளே! இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்? என்று கேட்டாள். அதற்கு அவள் எனது ஆட்டுமந்தையைக் கவனித்துக்கொண்டிருக்கிறேன். சர்வேசுரனிடம் ஜெபித்துக்கொண்டிருக்கிறேன். குடிக்கத் தண்ணீர் எடுக்க வேண்டும் என்று தன்னிச்சையாக பதில் கூறியவள், நான் உனக்கு கொஞ்சம் தருகிறேன் என்ற குரலால் ஈர்க்கப்பட்டு ஏறிட்டுப் பார்த்து திகைத்துப் போனாள்! தம் முன்பாக நிற்கும் அந்த அழகிய முதியவரைக் கண்டு வியந்து போனவள் தனக்கே உரிய எளிமையில், நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்களே! நீங்கள் சேசுவா? இல்லையேல் சம்மனசா என்று கண்கள் விரிய வினவினாள். அவளது கள்ளமற்ற உள்ளத்தை அறிந்த பெரியவர் அன்புடன் புன்சிரிப்புடன், நான் மௌரீஸ் (St. Maurice). இங்கே அருகே இருந்த சிற்றாலயம் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தது. எனது மகளே இந்த இடத்திற்கு திரும்பவும் வராதே. இது ஆபத்தான வேறொருவர் இடம். காவலாளிகள் பார்த்தால் உனது ஆடுகளைப் பிடித்து சென்றுவிடுவார்கள். பார்! அதோ அந்த பள்ளத்தாக்குக்குப் போ! அங்கே கடவுளின் அன்னையை நீ காண்பாய்! என்று கூறினார்.

ஐயா! நான் எப்படி அவர்களைக் காணமுடியும்? அவர்கள்தான் மோட்சத்தில இருக்கிறார்களே? என்று எதிர்கேள்வி கேட்டாள் பெனுவாத்தம்மாள். அதற்கு, ஆம்! அவர்கள் மோட்சத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் விரும்பும்போது பூமியிலும் இருப்பார்கள் என்று அன்போடு பதிலளித்து, அவளை ஆசீர்வதித்து மறைந்துபோனார்.

### தேவதாயின் காட்சி !

மறுநாள் தமக்கு அர்ச். மௌரீஸ் சுட்டிக்காட்டிய அந்த பள்ளத்தாக்கிற்குச் சென்றாள். அது Vallon des Fours - கில்னஸ் (Kilns) பள்ளத்தாக்கு என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் அங்கே மலைக் குன்றுகள் ஜிப்சம் நிறைந்ததாக இருந்தது. கிராமத்து மக்கள் அதிலிருந்து ஜிப்சத்தை வெட்டி எடுத்து, சுட்டு, சாந்தாக்கி தங்கள் கட்டிடங்களுக்குப் பூசி பயன்படுத்தி வந்தனர்.

அங்கே காணப்பட்ட குகை போன்ற அமைப்பின் நுழைவாயிலுக்கு வந்த பெனுவாத்தம்மாள் அப்படியே திகைத்துப்போய்விட்டாள். அங்கே . . . சொல்லொன்னா அழகுடன் கரத்தில் மிக அழகிய குழந்தையை ஏந்தியவாறு ஒரு பெண்மணி நின்றிருந்தாள்! கண்ணைப் பறிக்கும் பேரொளியோடு காணப்பட்ட அம்மாது மிகுந்த இரக்கத்தோடு பெனுவாத்தம்மாளைப் பார்த்தாள்!!

(தொடரும்)

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## அருள்நிறை மந்திரத்தின் வியாக்கியானம் (தொடர்ச்சி)

(3) **மகிமை ஒழுங்கில்** – தேவ மாதா ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்தாள் என்பதை விசுவாச சத்தியமாக அறிவித்தபோது, அர்ச்.பாப்பானவர் சொன்னதாவது: "அர்ச். கன்னிமரியம் மாளிடத்தில் பரிசுத்ததனமும், அர்ச்சிஷ்டதனமும் எவ்வளவு பூரணமாய் அமைந்திருந்ததென்றால், சர்வேசுரனுக்குப் பிறகு அவளைவிட மேலானதொன்றும் நம்மால் நினைக்கவும் கருதவும் கூடாது. அவளுக்குக் கொடுக்கப்பட்டது. இத்தன்மையானதென்று அதைக் கொடுத்த சர்வேசுரனுக்கு மாத்திரமே தெரியும்."

(4) **மோட்ச மகிமையும் பாக்கியமும்** – ஒவ்வொருவர் பெற்ற இஷ்டப்பிரசாதத்துக்கும் அதைக்கொண்டு அவர்கள் அடைந்த பேறுபலன்களுக்கும் தகுந்ததாயிருக்கும். ஆகையால் தேவமாதாவின் பரலோக மகிமை சகல சம்மனசுக்களுக்கும் அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் கிடைத்த மகிமையை விட அதிக மேலானதென்பது நிச்சயம்.

(5) **அவளுடைய மோட்ச ஆரோபணம்** – அவளுடைய சரீரம் ஆத்துமத்தோடு ஒன்றித்து, மோட்சத்திலிருக்கிறாள் என்பதைத் திருச்சபை விசுவாச சத்தியமாக அறிவித்துள்ளது. **உயிர்ப்பிக்கப்பட்ட தேவதாயின் சரீரமானது** அவள் பரம இராக்கினியென்றும், தேவதாயென்றும் குறித்துக் காட்டுவதற்கேற்ற விசேஷமான பிரகாசமும் காந்தியும் பொருந்தியதாயிருக்கின்றது.

(6) **தேவமாதா அதிகாரத்திலும் வல்லபத்திலும்** – மற்ற மோட்சவாசிகள் சகலருக்கும் மேற்பட்டவளாயிருக்கிறாள். அவள்தான் பரலோகத்துக்கும், பூலோகத்துக்கும், பாதாளலோகத்துக்கும் இராக்கினி. ஏனெனில் அவள்தான் நரகப் பாம்பின் தலையை நசுக்கினவள். ஆகையால் தனது திருக்குமாரனுக்குச் சகல வஸ்துக்களின் மேலுள்ள அரசாட்சியில் பங்கடைந்தவளாய் அவளுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறாள்.

### 5. தேவமாதா சர்வேசுரனுடைய தாயென்பதால் மனுஷருக்கும் தாயாயிருக்கிறாள் –

(1) **அவள் சகல மனுஷருக்கும்** – விசேஷமாய் கிறீஸ்தவர்களுக்கும் தாய். ஏனெனில் நமது மூத்த சகோதரராகிய சேசுக்கிறீஸ்துநாதரைப் பெற்றவள் அவள்தான். ஆகையினால் அவருடைய ஞானச் சரீரமாகிய திருச்சபையைச் சேர்ந்த சகலருக்கும் அவள் சுவீகாரத் தாயாரானாள்.

(2) **மேலும், அவள் நமது இரட்சண்யத்தை நிறைவேற்றுவதில் ஒத்தாசை செய்து, நமக்காகத் தமது திருக்குமாரனை ஒப்புக்கொடுத்ததால், நமக்கு மெய்யாகவே அவள் ஞான உயிர் கொடுத்திருக்கிறாள்** – சர்வேசுரன் தாம் மனுஷாவதாரஞ் செய்து, நம்மை இரட்சிப்பது அவள் வழியாக வரவேண்டுமென்று தீர்மானித்து, ஓர் சம்மனசை அனுப்பி, அவள் சம்மதங் கேட்டார். தமது திவ்விய குமாரனுகிய சேசுநாதரை மனுஷருக்காக பலியாய் ஒப்புக்கொடுத்த தேவமாதா மனம் பொருந்தி சம்மதித்தபடியால், அவள் வழியாகவே சுபாவத்துக்கு மேலான புதுச்சீவியம் நமக்குக் கிடைத்ததென்று தீர்மானிக்க வேண்டும். ஆதலால் அவள் மெய்யாகவே நமக்குத் தாய்.

(3) **அவள் உலகத்தில் ஜீவித்திருந்த காலத்தில்தானே நமது நாட்டில் தாயாருக்குரிய பாசம்காட்டியிருக்கிறாள்** – ஏனெனில் தமது குமாரனோடு எப்போதும், முக்கியமாய் அவள் பாடுபடும்போது சேர்ந்து ஒன்றித்து நமது இரட்சண்ய அலுவலை நிறைவேற்றியிருக்கிறாள். தமது திருக்குமாரனோடு அவளும் நமக்காகவும், பாவிகளுக்காகவும் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருந்தாள். நமக்கு மேலான ஜீவியத்தை அடைந்து தரும்படி தமது பேறுபலன்களைத் தமது திருக்குமாரனுடைய பேறுபலன்களோடு சேர்த்து ஒப்புக்கொடுத்தாள். நாம் சர்வேசுரனுக்குச் செய்யவேண்டியிருந்த பரிகாரத்தைச் செய்தது அவளல்லவென்பது மெய்தான். ஆனுல் சேசுநாதர் செலுத்திய பரிகாரமும் அவருடைய பேறுபலன்களும் நமக்குக் கிடைக்கும்படி அவரை ஈன்றெடுத்தவள் அவள்தான். அவர் மூலமாய் நமக்கு ஞான உயிரைக் கொடுக்க அவள் பட்ட வருத்தங்கள் எவ்வளவென்று சொல்லக்கூடுமோ?

(4) **இன்னமும், சேசுநாதர் மரிக்குமுன், சிலுவையிலிருந்துதானே, நம்மை அவளுக்குப் பிள்ளைகளாக ஒப்புவித்ததால், மெய்யாகவே அவள் நமக்குத்தாய்** – ஏனென்றால் அர்ச். அருளப்பரை ஆண்டவர் அவளுக்குக் காட்டி, "இதோ உமது மகன்" என்று திருவுளம்பற்றினுர். இவ்வார்த்தைகள் தாம் இரட்சித்த சகல மனுஷரைப்பற்றி நமதாண்டவர் சொல்லியருளினாரென்று அநேக வேத சாஸ்திரிகள் போதித்திருக்கிறார்கள். இச்சமயத்திலேதான் தேவமாதா சகல மனுஷருக்குந் தாயாரென்பது நிரூபிக்கப்பட்டது.

(தொடரும்)


*(2ம் பக்கத்தொடர்ச்சி)*

*மேலும் நமது 'Salve Regina' வை அரசாங்கத்தின் பத்திரிகை பதிவுசட்டத்தின் கீழ் பதிவு செய்யும் பணி நடந்து வருகிறது. அது கிடைத்தால் 'தபால் செலவு' சற்று மிச்சமாகும். எனவே விரைவில் அரசாங்கப் பதிவு கிடைக்கும்படியாகவும் வேண்டிக் கொள்ளுங்கள்.*

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**
**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை**
**பாளையங்கோட்டை**

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை



## அறிந்து கொள்வோம்!

[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]

### முதல் பாகம்

#### இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)

#### 5. சபைச் செபம் – (Collecta) தொடர்ச்சி.

#### சபைச் செபத்தின் முடிவுகள்

*சபைச் செபத்தின் முடிவின் வடிவங்கள் ஜெபத் தின் நோக்கத்திற்கேற்ப மாறக்கூடியதாக இருக்கின்றன. அவை:*

*1. தேவபிதாவுக்கு நேராகச் செபத்தை ஒப்புக் கொடுக்கும்போது சுதனைப்பற்றி ஒன்றும் குறிப்பிடா திருந்தால்:-* **தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில்** *சர்வேசுரனும், சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமாயிருக்கிற உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான சேசுக்கிறீஸ்துவின் பேரால்-*



*2. தேவபிதாவுக்கு நேராகச் செபத்தை ஒப்புக் கொடுக்கும் போது தேவசுதனைப்பற்றியும் குறித்திருந்தால்:-* **தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில்** *சர்வேசுரனும், சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமாயிருக்கிற உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான* **அதே சேசுக்கிறீஸ்து வின் பேரால்**-

*3. செபத்தின் கடைசியில் தேவசுதனைப்பற்றிக் குறித்திருந் தால்:-* **அவரே தேவரீரோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில்** *சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமான சர்வேசுரன்-*

*4. தேவசுதனுக்கு நேராகச் செபத்தை ஒப்புக் கொடுக்கும் போது:-* **பிதாவாகிய சர்வேசுரனோடு இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில்** *சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமாயிருக்கிற சர்வேசுரா-*

*5. தேவசுதனுக்கு நேராகச் செபத்தை ஒப்புக் கொடுக்கும் போது தேவபிதாவைப்பற்றியும் குறித்திருந்தால்:-* **அதே பிதாவாகிய சர்வேசுரனோடு இஸ்பிரீத்து சாந்துவின் ஐக்கியத்தில்** *சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமாயிருக்கிற சர்வேசுரா-*

*6. செபத்தில் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவைப்பற்றிக் குறித்திருந்தால்:-* **தேவரீரோடு அதே இஸ்பிரீத்துசாந்துவின் ஐக்கியத்தில்** *சர்வேசுரனும், சதாகாலமும் சீவியரும் இராச்சிய பரிபாலனஞ் செய்கிறவருமாயிருக்கிற உமது திருக்குமாரனும் எங்கள் ஆண்டவருமான சேசுக்கிறீஸ்துவின் பேரால்-*

*செப முடிவில்* **அப்படியே ஆகக்கடவது** *என்று சொல்லப்படும்.*

### ஜெபிப்போமாக - Oremus

*குருவானவர் சபைச் செபத்தையோ அல்லது வேறு குறிப்பிட்ட ஜெபத்தைத் தொடங்கும் முன்பாகவோ*

“ஜெபிப்போமாக ... Oremus” என்று கூறுகிறார். தங்களது விண்ணப்பங்களைப் பரலோகத்தை நோக்கி சமர்ப்பிக்க விசுவாசிகளை அழைக்கும் அறிவுரையாக இருக்கிறது. அதே நேரத்தில் பீடத்தின் நடுவில் இருக்கும் பாடுபட்ட சுரூபத்தை நோக்கி கைகூப்பி தலை குனிந்து வணக்கம் செலுத்துகிறார். இது, மோட்சத்திலும் தேவநற்கருணை யிலும் ஆத்தும சரீரத்தோடு வீற்றிருக்கும் சேசுநாதர் சுவாமியை நோக்கிய தாக இருக்கிறது. அவரிடமே இம் மன்றாட்டுக்களை சமர்ப் பிக்கிறார் என்பதன் அடையாளமாகவும் திகழ்கின்றது.

இவ்விதம் விசுவாசிகளையும் தன்னுடன் சேர்த்து ஜெபிக்க அழைப்பது, அச்செபம் குருவானவருடைய செபம் மட்டுமல்ல, விசுவாசிகளுடைய செபமாகவும் இருக்கிறது என்பதை உணர்த்துவதாகவும் இருக்கிறது. அதே சமயத்தில் குருவானவர் மட்டும் தங்கள் சார்பாக ஜெபிக்கட்டும் என்றிருந்தால் அது அவர்களுக்கு வீணாகிவிடும் என்ற எச்சரிப்பாகவும் இருக்கிறது.

## “ஆமென் - Amen”

சபைச் செபத்தின் முடிவில் பீடபரிசாரகன் “ஆமென்... Amen” என்று கூறுகிறான். குருவானவர் மன்றாடும் மன்றாட்டுக்கள் தயவுடனே கேட்கப்படவும், நிறைவேற்றப்படவும் விரும்பும் விசுவாசிகளின் குரலாகவே இது ஒலிக்கிறது. பழைய ஏற்பாட்டு நூல்களில் “அப்படியே ஆகட்டும்” என்ற வார்த்தை பல இடங்களில் குறிப்பாக தேவ வழிபாடுகளில் சொல்லப்படுவதைக் காணலாம். இது தமது அதிகாரப்பூர்வமான மகிமையை வெளிப்படுத்தும்படியாக நமதாண்டவராலும்கூட அடிக்கடிச் சொல்லப்பட்டது. ஆகையால் அது ஆசீர்வதிக்கப்பட்ட சொல்லாக “ஆமென்” என்று மொழிபெயர்க்கப்படாமலேயே திருச்சபை, வழிபாட்டில் பயன்படுத்திவருகிறது. முதலாம் நூற்றாண்டு களில் ‘ஆமென்’ என்ற சொல்லை ஆலயத்திலுள்ள அனைத்து விசுவாசிகளும் உச்சரித்து பதிலளித்தார்கள். அந்நூற்றாண் டைச் சார்ந்த வேதசாட்சியான அர்ச். ஜஸ்டின் தமது முதல் வியாக்கியானத்தில் (Apology Chap.67) “விசுவாசிகள் தங்கள் நன்றியைக் கூறுவதிலும், வழிபாட்டுச செபங்களில் குரு வானவரோடு சேர்ந்து ஜெபிப்பதிலும் ‘ஆமென்’ என்று உரைக்க வேண்டும்” என்று கூறுகிறார். ‘ஆமென்’ என்ற இந்த வார்த்தை நமது மீட்பரின் உதடுகளால் உச்சரிக்கப் பட்ட ஒன்றாதலால் இஸ்பிரீத்துசாந்துவானவருக்கு மிகவும் பிரியப்பட்டதாக இருக்கிறது. அதனாலேயேதான் இஸ்பி ரீத்துசாந்துவானவர் அதனை சர்வேசுரனின் திருச்சபையில் பயன்படுத்தி பாதுகாக்கச் சித்தமானார்.

## “ஆமென் சொல்லின் சிறப்பு”

புதிய ஏற்பாட்டில் நமதாண்டவர் தமது மகிமை யைத் துலக்கிக் காட்டவும், தமது மொழிக் கேட்பவர்களின் கவனத்தை தன்பக்கம் ஈர்க்கவும், தமது கருத்தை, செயலை உறுதிப்படுத்திக் கூறவும் “ஆமென்” என்று உரைப்பதை நாம் பார்க்கிறோம்.

ஜெபங்களின் முடிவிலும், ஆசீர்களின் முடிவிலும், விசுவாசப்பிரமாண முடிவிலும் (doxologies), மற்றும் கீதங்களின் நிறைவிலும் விசுவாசிகளுடையவும், குருவான வரின் இருதயங்களின் விருப்பப்பற்றுதலாக வெளிப்படை யாக இது சொல்லப்படுகிறது.

ஆடம்பரச் சடங்குகளிலும், திடப்படுத்துதல் வழி பாடுகளிலும் அங்கீகாரம் - அனுமதியளித்தல் சடங்குகளி லும் “ஆமென்” என்ற சொல் பயன்படுகிறது. சபைச் செபத்தின் முடிவில் ஆமென் என்று சொல்வது, சபைச் செபத்தில் மன்றாடப்பட்ட விண்ணப்பங்களினுடைய உறுதியையும், அதன் மறுவேண்டுதலாகவும் சர்வேசுரனால் அவை கேட்கப்படுவதன் நம்பிக்கையின் உறுதியின் வெளிப் பாடாகத் திகழ்கின்றது.

“ஆமென்” என்று விசுவாசிகளால் சொல்லப்படுவ தானது, குருவின் மன்றாட்டிற்கான ஆமென் - அதாவது “நீர் கேட்டுக்கொண்டவை அப்படியே நடக்கட்டும்” என்ற முத்திரையாகவும் இருக்கிறது.

இந்தச் சிறிய, ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையை பக்தியுடனும் தூய இதயத்துடனும் மோட் சத்தில் சம்மனசுக்கள் எவ்வாறு பக்தி உருக்கத்தோடு (காண்க: காட்சி. 7:12) கூறப்பட வேண்டும்.

## சபைச்செபம் செபிக்கும் பாவனை!

திருச்சபையின் திருவழிபாட்டின் முறைமையின் படி சபைச்செபம் சொல்லும்போது குருவானவர் தமது மார்புக்கு முன்பாக கரங்களை விரித்துக்கொள்ள வேண்டும். கரங்களின் விரல்கள் விரிக்கப்படாமல் சேர்த்து ஒடுக்கிய வாறு தோள்பட்டை உயரத்திற்கேற்ப விரிக்க வேண்டும் (De Sacrif. Miss. VI. tit.5). இந்த பாவனையால் தேவையற்ற வீண் ஆடம்பரத்திற்கான அவசியத்திற்கு இடம் தராமல் தடுக்கப் படுகிறது. தெர்த்துல்லியன் என்பவர் நமது மன்றாட்டுக்களை சர்வேசுரன் முன்பாக சமர்ப்பிக்கும் போது தாழ்ச்சியுடனும் அடக்கவொடுக்கத்துடனும் மன்றாட வேண்டும். கரங்களை மேலே உயரமாக உயர்த்தி மன்றாடுவது கூடாது. மாறாக அமைந்த மனதோடு சிரம் தாழ்த்தி செபிக்க வேண்டும் என்கிறார். இவ்வாறு குருவான வர் கரங்களை விரித்தும், சற்று உயர்த்தியும் செபிக்கும் பாவனையானது குருவின் உள்ளத்திலும், ஆலயத்தில் கூடி யிருப்போரின் மனதிலும் பக்தியையும், உருக்கத்தையும், உறுதியையும் ஊட்டக் கூடியதாக இருக்கிறது.

கரங்களை உயர்த்துவது வெற்றியைத் தருவதாக இருக்கிறது. அன்று அமலேசித்தாருக்கு எதிரான சண்டை யின்போது மோயீசன் தன் கரங்களை “ஏறெடுத்திருக்கை யில்” (- உயர்த்தியிருக்கையில்) இஸ்ரா யேலியர்கள் வெற்றி பெற்றனர். அவர் கரங்களை சற்று தாழ்த்துகையில் தோல்வி கண்டார்கள். (காண்க யாத். 17:11). சாலமோனும் கர்த்த ருடைய பீடத்துக்கு முன்பாக நின்று கைகளை விரித்து ஜெபித்தார். (III அர. 8:22). தாவீதரசரும் “ஆண்டவரே நான் உம்மை நோக்கித் தாழ்ச்சியோடு வேண்டிக்கொள்ளும் போதும், உமது பரிசுத்த ஆலயத்தை **(15-ம் பக்கம் பார்க்க)**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

**(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)**

## (12) சிருஷ்டிகருடைய மாதாவே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

பிரார்த்தனையின் ஆரம்பத்தில் மரியன்னையை நோக்கி சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே என்று வேண்டினோம். அத்துடன் திருச்சபை திருப்தியடைந்து விடவில்லை. அவர்களை சிருஷ்டிகருடைய மாதாவே எனப் புகழ்ந்தேற்றுகிறது.

ஒன்றுமில்லாமையிலிருந்து ஒரு பொருளை உண்டாக்குதல், சிருஷ்டித்தல் அல்லது படைத்தல் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு தெய்வீக ஆற்றல் வேண்டும். ஆகவே, சர்வேசுரன் ஒருவரே சிருஷ்டிகர். அவர் ஒருவரே ஒன்றுமில்லாமையிலிருந்து ஒரு பொருளை உருவாக்க முடியும். திருச்சபை கன்னிமாமரியை "சிருஷ்டிகரின் மாதாவே" என்று அழைக்க நம்மைத் தூண்டுகிறது. இது ஒரு விநோதமானதாகத் தெரிகிற தல்லவா? ஒரு சிருஷ்டி சிருஷ்டிகருக்கு மாதாவாக இருப்பது எப்படி சாத்தியமாகும்?! ஒரு அருவி தன் உற்பத்தி ஸ்தானத்தைத் தானே உண்டாக்கிக்கொள்வதா? உண்டாக்கப்பட்ட பொருள் தன்னை உண்டாக்கியவரையே சிருஷ்டித்தல் என்பது ஓர் எதிர்மாறான தத்துவமல்லவா? சிருஷ்டிகர் என்றும் சிருஷ்டிகரே அவர் ஒரு நாளும் சிருஷ்டியாக முடியாது.



இக்கூற்று சேசுநாதர்சுவாமிக்கு தேவசுபாவம் என்ற ஒரே சுபாவம் மட்டும் இருக்குமாகில் முற்றிலும் உண்மையாகும். அப்பொழுது சிருஷ்டிகரின் மாதா என மரியாயை ஒருபோதும் அழைப்பது கூடாது. ஏனெனில் தேவசுபாவம் நித்தியத்திற்கும் தன்னிலே தானே நிலைகொண்டது. ஆனால் நம் சேசுநாதர் சுவாமிக்கு தேவசுபாவம், மனிதசுபாவம் ஆகிய இரண்டு சுபாவங்கள் உண்டல்லவா? மனித சுபாவத்தில்தான் நம்மை இரட்சிக்க அவர் மனுமகனாய்ப் பிறந்தார். இம் மனித சுபாவத்தில்தான், முப்பொழுதும் கன்னியான மாமரி ஒப்பற்ற புதுமையினால் சர்வேசுரனுக்கு மாதாவாகும் பாக்கியம் பெற்றார்கள். "வார்த்தையானது மாமிசமாகி நம்முடனேகூட வாசமாயிருந்தது" (அரு. 1:14) என்று சுவிசேஷம் உரைப்பதும் இதனையே.

ஆனால் மாமிசமான அவ்வார்த்தை மனுவுருவெடுத்த அப்பாலகன், எல்லாவற்றிலும் பிதாவுக்கும் இஸ்பிரீத்துசாந்துவுக்கும் சரிசமானமான இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரன். இந்த மூன்று தேவ ஆட்கள்தான் பிரிக்கமுடியாத ஒரே சித்தத்தினால் சகலத்தையும் சிருஷ்டித்தனர். "அவர் திருவுளம்பற்றவே எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது; அவர் கட்டளையிடவே எல்லாம் உண்டாக்கப்பட்டது" (சங். 148:5).

எனவே சுதனாகிய சர்வேசுரன் தேவசுபாவத்தில் **சிருஷ்டிகர்;** மனிதசுபாவத்திலோ ஒரு **சிருஷ்டி!** ஏனெனில் அவர் மகா பரிசுத்த கன்னிமரியாயின் வழியாகவே இவ்வுலகில் பிறக்க வேண்டியிருந்தது. வான மண்டலமே கொள்ளமுடியாத ஆண்டவர் மரியாயின் வயிற்றில் வாசம் செய்தார். ஒன்பது மாதமளவாய் மரியாயின் உதரமாகிய சிறு குடிலில் சயனித்து கன்னிமரியாயிடமிருந்து அற்புதமாய்ப் பிறந்தார். கன்னிமரி சுதனாகிய சர்வேசுரனின் அன்னையானார்கள். சுதனாகிய சர்வேசுரனின் சரீரம் மாமரியின் சரீரம்; அவரது உடலில் ஓடும் இரத்தம் மரியாயின் இரத்தம். அவர் ஓர் மனிதன்; அதே சமயத்தில் அவர் கடவுள், சிருஷ்டிகர்; அவர் கடவுள் - மனிதன்! எனவேதான் பரிசுத்த மாமரி அவரது தாய் - சிருஷ்டிகரின் மாதா. என்னே! தேவதாயின் மேன்மை! "மரியாயின் மகத்தான இப்பெருந்தன்மையை அளவிட்டுக் கூற வல்லவர் யார்?" என்று அர்ச். தமியான் இராயப்பர் வியப்பது எவ்வளவு உண்மை!!

உண்மையில் சிருஷ்டிகருடைய மாதாவின் மகிமை எவ்வளவு பெரிது! அவர்களது தாய்மை சிருஷ்டிகளுக்கெல்லாம் மேலாக அவர்களை உயர்த்தி தெய்வத்தன்மையின் எல்லைக்கே அவர்களை இட்டுச்செல்கின்றன. அர்ச்சியசிஷ்டவர்களுக்கும் ஏன் - சம்மனசுகளுக்குமே அளிக்கப்படாத விசேஷ வணக்கம் (Hyperdulia) செலுத்தப்படும் தனி உரிமையை தேவதாய்க்குப் பெற்றுத் தருவது அவர்களது தாய்மை. அதனால்தான் உலகமெங்கும் மக்கள் அவர்களைப் போற்றி அவர்களுக்கு விசேஷ வணக்கம் செலுத்துகின்றனர். சிருஷ்டிகரின் மாதாவே என்று அழைத்து மகிழுகின்றனர் மரியாயின் மைந்தர்கள். நாமும் தாய் திருச்சபையோடு ஒரே குரலாய் **சிருஷ்டிகரின் மாதாவே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்!** என்று பிரார்த்திப்போமாக.

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(அமெரிக்காவில், வாஷிங்டனில் உள்ள அர்ச். தமதிரித்துவத்தின் கார்மெல் சபையினர் வெளியிட்ட பிரசுரத்தின் தமிழாக்கம் – ஆசிரியர்.)

## (2) கத்தோலிக்கப் பிள்ளை வளர்ப்பு முறை

அநேகமாக அர்ச்சியசிஷ்டவர்களில் அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளின் குழந்தைப் பருவத்தைப்பற்றி மட்டுமே நமக்கு அதிகமான விபரங்கள் கிடைக்கப் பெற்றிருக்கிறோம்.அவளுக்கு நாலரை வயது நடக்கும் சமயத்தில் திருமதி. மார்டின் தன்னுடைய சகோதரருக்கும், தமது மகள் பவுலினுக்கும் மற்றும் பலருக்குமாக 120க்கும் அதிகமான கடிதங்கள் எழுதியுள்ளார். அவை நமக்கு அதிகமான காரியங்களை படிப்புவிக்கும் களஞ்சியங் களாகத் திகழ்கின்றன. இக்கடிதங்கள், ஒரு ஆத்துமத்தின் அர்ச்சிப்பின் துவக்கத்தையும், அதற்கு பெற்றோர் வகிக்கும் முக்கிய பங்கினையும் நமக்கு உணர்த்துபவையாக உள்ளன. அர்ச். குழந்தை சேசு தெரசம்மாள் அநேக நல்ல குணநலன்களையும், பண்புகளையும் கொண்டிருந்தாலும், அவள் ஒரு அர்ச்சியசிஷ்டவளாக இவ்வுலகில் பிறக்கவில்லை; நம் அனைவரையும் போலவே அவளும் ஜென்மப்பாவத்துடனும், அதன் விளைவுகளுடனும் தான் பிறந்தாள். அவளுடைய குறைபாடுகள் சிறியவைகளாக இருந்தாலும் அது நடைமுறை வாழ் விலும் காணப்பட்டது. ஒரு சிறு உதாரணத்தை நம்மால் கூற முடி யும்: அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளுக்கு இனிப்பு என்றால் மிகவும் பிடிக்கும்! ஒருமுறை அவளுக்கு இரண்டு இனிப்பு வளையங்கள் (மிட்டாய்) கொடுக்கப்பட்டன. தங்க மனசு படைத்த தெரசாள் அதில் ஒன்றை தனது சிறிய அக்காள் செலீனுக்கு கொடுத்துவிட முடிவு செய்தாள். அந்தோ! வீடு போய் சேரும் முன்பாக ஒன்றைத் தொ லைத்துவிட்டாள். இனி என்னசெய்வது? மீதம் உள்ள ஒரு இனிப்பு வளையத்தைத் தான் வைத்துக்கொள்வதா? அல்லது செலீனுக்குக் கொடுப்பதா? என்ற மனப்போராட்டம். கடைசியாக, செலீனுடையது தொலைந்துவிட்டது. இது தன்னுடையதே என்ற முடிவுக்கு வந்தாள்! இந்த நிகழ்ச்சியைப்பற்றி பின்னாளில் நினைவுகூறும் வகையில்; "பாருங்கள், நாம் சிறு பருவத்திலிருந்தே எப்படி சுயநலத்தைத் தேடுகிறோம் என்பதை" என்று உரைத்தாள். தாய் கொடுத்த நீண்டதான, கைகளை மூடக்கூடிய அழகான மேற்சட்டைக்குப் பதிலாக கைகள் இல்லாத வேறொரு வகையான ஆடையை அணிந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என்ற நினைத்த தெரசாளின் எண்ணத்தில் "ஏவையின்" வாரிசை எப்படி நாம் கண்டுகொள்ளாமல் இருக்க முடியும்!



இவை அவளிடமிருந்த குறைபாடுகள். அவளிடம் காணப்பட்ட குறிப்பிடத்தக்க நல்ல குணம், தெள்ளத் தெளிவான "நேர்மை". திருமதி மார்டின் நியாயமான தாயின் பெருமையோடு, "உலகத்தில் உள்ள எல்லா தங்கத்தையும் தருவேன் என்று சொன்னாலும், என் சிறிய குழந்தை ஒரு பொய்யையும் சொல்ல மாட்டாள்!" என்று எழுதியுள்ளாள். தான் செய்த குழந்தைத்தனமான குறும்பு அனைத்தையும் எந்தவிதமான சாக்குப் போக்குமின்றி தன்னுடைய பெற்றோருக்கு வெளிப்படுத்தி, அதற்கான பொறுத்தலைக் கேட்டு, தண்டனை பெறுவதற்குக் காத்திருப்பாள்! இக்குழந்தையின் மாசற்றதனத்திற்கு கவரும் தன்மை உண்டு என்பதை திருமதி மார்டின் தனது புதல்வி பவுலினுக்கு எழுதிய கடிதத்தில், "ஒருமுறை சின்ன தெரசாள் மண்ணால் செய்யப்பட்ட ஒரு சிறு ஜாடியை உடைத்து விட்டாள். அதை என்னிடம் வந்து சொன்னாள். நான் சிறு கோபத்தைக் காண்பித்து, வருத்தத்தை தெரிவித்தேன். இவள் சிறிது நேரத்திற்குப் பின் மீண்டும் என்னிடம் வந்து, "அம்மா கவலைப்படாதீர்கள். நான் பணம் சம்பாதிக்கும்போது, ஒரு புதிய ஜாடியை உங்களுக்கு வாங்கித் தருவேன். ஆனால் அதற்கு சிறிது காலம் பிடிக்கும்" என்றாள்.

சின்ன தெரசம்மாள் எளிதில் உணர்ச்சிவசப்படுபவளாக இருந்தாள். ஒரு சிறு காரியம்கூட அவளது கண்களில் கண்ணீரை வரவழைத்து விடும். இருப்பினும் திடமான சித்தமும், ஏன் பிடிவாதமும் கொண்டவளாக இருந்தாள் என்றுகூட

கூறலாம். அர்ச். குழந்தை சேசு தெரசம்மாள் இவைபற்றி எழுதும்போது, "இப்படிப்பட்ட குணநலன்களை உடைய நான் கவனமற்ற, திறமையற்ற பெற்றோர்களால் வளர்க்கப் பட்டிருப்பின் கெட்டவளாக வளர்ந்து என் ஆத்துமத்தையே இழந்து போகக்கூடிய சூழ்நிலைக்கு வந்திருப்பேன்" என்று குறிப்பிடுகிறாள். மேற்கூரிய வாக்கியங்கள் பெற்றோர்க ளிடத்தில் நல்ல பயத்தை உண்டாக்கி, அவர்களுக்கு தங்க ளின் கடமையை உணர்ந்துகொள்ள செய்வனவாக!

நாள் முழுவதும் டி.வி. பெட்டி முன்பாக அமர்ந்து அல்லது வானொலியில் நேயர் விருப்பத்திற்கு ஏற்ப ஒலி பரப்பப்படும் மாம்ச இச்சைகளைத் தூண்டிவிடக்கூடிய சினிமா பாடல்களைக் கேட்டுக்கொண்டிருக்கும், பார்த்துக் கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையினரை போல தெரசாள் வளர்க்கப்பட்டிருந்தால், அவள் ஒரு அர்ச்சிய சிஷ்டவளாகியிருப்பாளா? திருமதி மார்டின் நவீன காலப் பெற்றோர்களைப் போல நடந்திருந்தால் சர்வேசுரனுக்கும் இவ்வுலகிற்கும் அர்ச். தெரசம்மாள் கிடைக்காமல் செய் திருப்பாள்!

ஆகவே பெற்றோர்களே! உங்கள் பிள்ளை வளர்ப்பு முறையை சீர்தூக்கிப் பார்த்து சரிசெய்ய தாமதம் செய்யா தீர்கள்! நீங்கள் சர்வேசுரனுக்கு கொடுக்கவேண்டிய கணக்கை முன்னிட்டும் உங்கள் பிள்ளைகளின் ஆத்தும நலனை முன்னிட்டும் இதைச் செய்யுங்கள்!

ஒருநாளில் திருமதி மார்டின் பலமுறை, என் சர்வேசுரா, என் இருதயத்தை உமக்கு கையளிக்கிறேன். வேறு எந்த சிருஷ்டிகளும் அதைக் கைக்கொள்ளாதவாறு அதை நீர் ஏற்றுக்கொள்ளும், சேசுவே! என்ற சிறிய ஜெபத்தை தமது சிறு குழந்தை சொல்லும்படிச் செய்வாள். எதைச் செய்தாலும் அது சர்வேசுரனை சந்தோஷப்படுத்து வதற்காக, அவர்மேல் கொண்ட சிநேகத்திற்காக செய்யப் படவேண்டுமென்று சிறுமியான தெரசம்மாளுக்கு கற்பித் தாள். ஒருமுறை அவள் தனது சகோதரி செலீன் படித்துக் கொண்டிருந்த அறைக்குள் போக விரும்பி கதவைத் திறக்க முயற்சி செய்தாள். மிகச் சிறியவளான அவளால் கதவைத் திறக்கமுடியாமல் போகவே அதிருப்தியடைந்து வாசலி லேயே படுத்துக்கொண்டாள். இதைக் கண்ட தாய் அவ்வாறு செய்யக்கூடாதென்று அறிவுறுத்தினாள். மறுநாள் திரும்பவும் கதவுகள் மூடி இருந்தமையால் மீண்டும் கதவின் முன்பாக படுத்துக்கொண்டாள். இதைக் கண்ட அவளது அக்காள் மரி, "தெரேஸ் நீ இப்படி செய்யும்போது சின்ன சேசுவை மிகவும் நோகச் செய்கிறாய்" என்றாள். அதைக் கேட்ட தெரேஸ் தவறை புரிந்து கொண்டாள். அதை மறுபடியும் செய்யாதிருந்தாள்.

சிறு வயதிலேயே பரித்தியாகம் செய்வதற்கு தன் னுடைய தாயிடமிருந்து கற்றிருந்தாள் தெரேஸ். ஒரு ஆன்மாவின் வரலாறு என்று தான் எழுதிய தனது வாழ்க்கை சரிதையில் தனது மூன்றாவது வயதிலிருந்து நல்ல சர்வே சுரனுக்கு எதையும் மறுத்ததில்லை என்று குறிப்பிட் டுள்ளாள். இது அர்ச். குழந்தை சேசு தெரசம்மாளின் புண்ணியத்திற்கு மட்டுமின்றி, அவளுடைய தாயின் நேர்த்தி யான பிள்ளை வளர்ப்பு முறைக்கும் சான்றாக இருக்கிறது.

---

**(12-ம் பக்கத் தொடர்ச்சி. . . )** நோக்கி என் கைகளை உயர்த் தும்போதும் என் மன்றாட்டைக் கேட்டருளும்" (சங். 27:2) என்று ஜெபிக்கிறார்.

கைகளை விரித்து சபைச் செபம் சொல்லும் பாவனை நமதாண்டவரின் ஆராதனைக்குரிய கரங்கள் சிலுவையில் விரிக்கப்பட்டு உயர்த்தப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. நமது மீட்பர் தமது ஜீவாந்திர இரத்தப் பலியை அகில உலகிற்குமாக ஒப்புக்கொடுத்து, ஜெபித்து மன்றாடும்போது கரங்களை இவ்வாறு விரித்திருந்தார். இந்த தேவ முன்மாதிரிகையை பின்பற்றியே ஆதிக்கிறீஸ்த வர்கள் ஜெபிக்கும்போது கரங்களை சிலுவை வடிவில் விரித்து உயர்த்தி மன்றாடினார்கள்.

கரங்களை விரித்து மன்றாடுவது, அரவணைக்கும் பாவனையாகவும், விசுவாசிகளின் அனைத்து ஆவல்களை யும், விருப்பங்களையும் சேர்த்து அடைந்து கொள்வதன் அடையாளமாக இருக்கிறது. இவ்வாறு கரங்களை உயர்த்துவது நமது இருதயங்களை சர்வேசுரனை நோக்கி மேலே எழுப்புவதாக திகழ்கிறது.

ஆகையால்தான் குருவானவர் பீடத்தில் நிற்கிறார். ஆண்டவரை நோக்கி அபயமிடுகிறார். மேலே அவரிடம் இருந்து வரும் மீட்பையும், பாதுகாவலையும் பெறக் கரங் களை மெல்ல விரிக்கிறார். பின்னர் கரங்களை மீண்டும் சேர்த்து குவிக்கிறார். அது குருவின் ஒற்றுமையில்லாமை யையும், தாழ்நிலையையும், இரங்கத்தக்க நிலையையும், அவரது பக்தியையும் வெளிக்காட்டுவதாக இருக்கிறது. தன்னையே ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு அவரில் இளைப்பாற்றியடைவதாகவும்; சர்வேசுரன் ஒருவரே மிகப் பெரியவர், உன்னதமானவர், அளவற்ற நன்மைத் தனம் மிக்கவர், அனைத்து வரப்பிரசாதங்களுக்கும் ஊற்றானவர் என்பதையும்; சேசுக்கிறீஸ்து வழியாகவே நாம் எந்தவொரு பரலோகக் கொடையையும் பெறுகி றோம் என்ற ஏற்றுக் கொள்ளுதலின் வெளிப்பாடாக கரங்களை குவித்துக் கொள்கிறார்.

குரு கிழக்குத் திசையை நோக்கித் திரும்பி யிருப்பது (அதாவது ஆலய பீடத்தைப் பார்த்து திரும்பி யிருத்தல்) தொன்மையான பழக்கமாக இருக்கிறது. சூரியன் உதிக்கும் திசையை நோக்கியே நாம் ஜெபிக்க வேண்டும். இது கிழக்கில் உதிக்கும் உண்மையான ஒளியானவரை (சேசுக்கிறீஸ்து நாதரை) நோக்கி ஆன்மா திரும்பியிருத்தலைக் குறிக்கிறது என்று வேத அறிஞரான ஓரிஜன் என்பவர் உரைக்கிறார். ஆகையால்தான் தேவால யங்களும் பொதுவாக கிழக்கு நோக்கியே கட்டப்படு கின்றன. இதனாலேயே தான் குருவும், விசுவாசிகளும் ஜெபிக்கும்போது சூரியன் உதிக்கும் திசையை நோக்கிய படி நிற்கமுடிகின்றது.

**(தொடரும்)**

# செய்திகள்

## ★ மக்கள் தொகையைக் காரணம் காட்டி அநீதி !

இந்திய சட்ட சீர்திருத்த குழு, மக்கள் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கேரள மாநிலத்தில் புதியதொரு "மசோதாவை" தயார் செய்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன. இதன்படி பெரிய குடும்பங்கள் நெருக்கடிக்கு உள்ளாகக்கூடிய நிலை ஏற்படலாம்! இரண்டுக்கு மேற்பட்ட குழந்தைகளை உடைய குடும்பங்களுக்கு இலவச கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் மறுக்கப்படலாம். இந்த கமிஷனில் தலைமை வகிக்கும் உச்ச நீதிமன்ற நீதிபதி இவ்வாறு அநீதியை செய்கிறார்.

## ★ கிறீஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல் அதிகரிப்பு !

பிலிப்பைன்ஸ் நாட்டின் வடபகுதியில் நடந்த கலவரத்தில் இஸ்லாமிய தீவிரவாதிகளால் 4 கிறீஸ்தவர்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமுற்றுள்ளனர்.

நைஜீரியா நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினரான கிறீஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல் அதிகரித்து வருகிறது. இஸ்லாமிய மதவாதிகளால் கடந்த மாதம் மட்டுமே 8 கோயில்கள் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன.

ஆந்திராவில் ஆகஸ்ட் 16–ம் தேதி, 38 வயது நிரம்பிய கார்மெல் சபை குருவானவர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். கை கால்கள் உடைக்கப்பட்டு, கண் குழியிலிருந்து கண்கள் பிடுங்கப்பட்ட நிலையில் உடல் கண்டெடுக்கப்பட்டது.

## ★ சலேசிய சபையினரின் 150-ம் ஆண்டு ஜூபிலி !

1858–ஆம் ஆண்டு அர்ச். ஜான் போஸ்கோ–வினால் தொடங்கப்பட்டு இன்று உலகமெங்கும் பரவியுள்ள சலேசிய சபை, தன்னுடைய 150 ஆண்டு நிறைவை மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறது. **"கடவுளின் அதிமிக மகிமைக்காகவும், மக்களின் ஆன்மஇரட்சணியத்திற்காகவும்"** பாடுபடுவதற்கு தொடங்கப்பட்ட இச்சபையானது வேதபோதகத்தில் உலகிலேயே 3வது மிகப்பெரிய சபை என்பது குறிப்பிடத்தக்கது.

## ★ இலங்கை மாதா திருத்தலத்தில் மாதா சுரூபம் மீண்டும் கொண்டுவரப்பட்டது!

இலங்கையில் நடக்கும் உள்நாட்டுப்போரின் காரணமாக மிக்க பிரசித்திப்பெற்ற மாதா திருத்தலம் மூடப்பட்டு அங்குள்ள மாதா சுரூபம் வேறு இடத்தில் பத்திரமாக பாதுகாக்கப்பட்டது. கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி, மாதா பரலோகத்திற்கு ஆரோபணமான திருநாளன்று மேற்றிராணியாரால் மீண்டும் மாதா சுரூபம் திருத்தலத்திற்கு கொண்டுவரப்பட்டது.

### தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:

**பாளையங்கோட்டை:**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம்:**
கிறீஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 04651 - 294785

**நாகர்கோவில்:**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**தூத்துக்குடி:**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம்:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2586201.

**திருச்சி:**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்.
தொலைபேசி எண்: 0431 - 2770042.

**சென்னை:**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 9941353483.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி**

**ஆர். என். கண்டிகை:**
ஜென்ம இராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.


Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. e-mail: sspxindia@gmail.com (or) rajakumar@sspx.com